நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 211/2025

## P.W.1 -ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஸ்டீபன் |
| தந்தை / கணவர் பெயர் | : | மதலைமுத்து |
| கிராமம் | : | கூராண்டிபுதூர் (நவப்பட்டி) |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 62 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026-ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10-ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 12.53 PM

1. நான் தற்போது கூராண்டிபுதூரில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. யாருக்கு அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டதற்காக ஒரு

கையெழுத்து செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். (**முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இந்த விபத்து என் வீட்டிற்கு அருகில் நடந்தது என்றால் என் தோட்டத்திற்கு அருகில் நடந்தது. விபத்து நடந்த அன்று மழை பெய்ததா என்றால் தெரியவில்லை. 30.10.2019ம் தேதி இரவு 7.50 மணி அளவில் நான் என்னுடைய வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்தபோது KA 01 MQ 8436 ஆம்னிக் காரில் மேட்டுர் பக்கம் இருந்து பவானி மெயின் ரோட்டில் ஆஞ்சநேயர் கோவில் அருகில் ஓட்டி வந்தனர் என்றால் தெரியாது.

2. விபத்து நடந்த இடம் இருட்டாக இருந்ததா என்றால் தெரியவில்லை. KA 17 D 4762 டாரஸ் லாரியை எவ்வித சிக்கனலும், இண்டிகேட்டர் போடாமலும், மெயின் ரோட்டில் இடது புறமாக எதிரி லாரியை நிறுத்தி வைத்திருந்ததால் ஆம்னிக் கார் லாரியின் மீது மோதி விபத்துக்குள்ளானது என்றும் காரில் வந்த அனைவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் தான் இந்த விபத்து நடந்தது என்றும் அதனால்தான் கௌரி சங்கர் எனபவர் இறந்துவிட்டார் என்றும் , மற்றவர்களுக்கு பலத்த அடிப்பட்டது என்றால் சரியல்ல.

3. இந்த வழக்கு சம்பந்தமாக 31.10.019ம் தேதி காலை 6.00 மணி அளவில் நானும், பெரியசாமியும் சம்பவ இடத்தில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் எங்கள் இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி அதில் உள்ள விவரங்களை சொன்னபிறகுதான் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.05 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**